முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1141

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.11.2022, ஞாயிற்றுக்கிழமை

1. அறம்காத்து வருகின்ற அண்ணலே
ஆறுமுக ஞானியே எந்தன் அவதாரமே
வரம்தந்து சுப்ரமணியர் யானும் உமக்கு
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது துலை திங்கள்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 ம் நாள் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை)
அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
வாசி வென்ற ஞானியர்படைகளெல்லாம்
வலம் வந்து அரங்கனுக்கு பலம் கூட்டி
3. கூட்டியே பேராற்றல் தந்துவர
குருபரன் ஆறுமுகன் யானும் இனிதே
தட்டாது அரங்கன் உள்ளிருந்து
தக்கபடி உலகோரை வழிநடத்தி
4. வழிநடத்தி அன்னதான சேவைவழி
வையகத்தை பாதுகாத்து வருகின்றேன்
அழியாமை பெற வேண்டுமாயின் உலகத்தார்
அவசியம் அரங்கன் குடில் நாடிவந்து
5. வந்துமே சுத்த சைவ நெறி ஏற்று
வணங்கி அரங்கனிடம் மகா மந்திர தீட்சைபெற
சிந்தை வழி தெளிவுகளெல்லாம் கூடி
சிறப்பறிவாய் பிறவாத பேற்றுக்குண்டான
6. ஆனதொரு ஞானசித்தி முக்திகளெல்லாம்
அரங்கன் வழி அழியாமையாக ஞானமாக
வரமென நிலைகள் கூடி இனிதே
வாழுங்காலமே ஞானிகளாக மாற்றம் கண்டு
7. கண்டுமே உலகோர் ஞான லோகம் அமைக்க
வல்லமைகொண்ட சக்திகளாக உருவெடுத்து
அழியாமையோடு இந்த கலியுகத்தில்
அற்புதமான ஞான ஆட்சி படைத்து சிறப்பு காண்பர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–